முருகப்பெருமான் துணை

**மகான் வேதாந்தச் சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.04.2024,** செவ்வாய்க்கிழமை

1. சத்திய ஞானகுருவே அரங்கா
சற்குருவாய் சகலரும் ஞானம்பெற
சத்திய தரும சன்மார்க்க நெறியை
சண்முகனார் ஆசிபட அருளும் தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை குரோதி தகர்திங்கள்
அச்சமற தசதிகதி குசன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 10ம் நாள், 23.04.2024, செவ்வாய்க்கிழமை)
3. வாரமதில் வேதாந்தச் சித்தரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமில்லா ஞானவழிகளை
சுத்தநெறி கொண்டு அருள
4. அருளும் அரங்கன் வழிகாட்டலில்
அகிலத்தார் வந்து சரணடைய
அருள்மிகு பிரணவக் குடிலை
அபயமென மக்கள் கூடும் சரணாலயமாக
5. ஆகவே ஞானிகள் படைத்து
ஆற்றல் மிக்க உபதேசம் தர
மகானே எனமக்கள் கூட்டம்
மனமுவந்து சரணாகதி காண
6. காணவே ஞானத்தின் முதற்படி
கருணை வடிவாக இறங்கி
ஞானவழி அன்பும் அறிவும்
நல்செயல் வடிவாக மாறி
7. மாறியே தானென்ற அகந்தை
மனம்விட்டு விலகி நின்று
அறிவின் தெளிவில் தேடல்
ஆசான் வழிகாட்டலில் ஊறி

8. ஊறியே உலக செயல்பாட்டில்
உண்மைபட தயவு வடிவே
அறிவின் தேடலின் ஞானமாகி
அடுத்தவரின் பசிபிணி விரட்டும்

9. விரட்டும் தருமமாக மாறி
விடாது செய்யும் சேவையாகி
புரட்டும் தீவினையை விரட்டி
புண்ணியத்தால் ஞானத்தின் அடுத்தநிலை

10. நிலைகூடி இறுகப் பற்றிட
நித்ய பூசை ஞானிகள்மேலே
சளைக்காது செய்து தொடர்ந்து
சற்குருவே எல்லாம் என கொண்டிட

11. கொண்டிட உலகப்பற்று விலகி
குருவழி சகலதும் விளங்கி
உண்டான பிறவிப்பிணி நீங்கி
உயர்வான கடைத்தேற்றம் பெறக்கூடும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—